**தலைப்பு 260 - நுவரெலியா மாவட்ட செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன நுவரெலியா மாவட்ட செயலகத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 260 – நுவரெலியா மாவட்ட செயலகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 மே 25 ஆந் திகதி ஆணைக்குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நுவரெலியா மாவட்ட செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.18 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | 1. | செயல்நடவடிக்கைத் திட்டத்தை சரியாக தயாரிக்காமை | 2.3.1 |
| | | 2. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றாமை | 2.3.2(அ) |
| | | 3. | எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி செய்தல் மட்டத்தை அடைந்து கொள்ளாமை | 2.3.2(ஆ) |
| | | 4. | எதிர்பார்க்கப்பட்ட நலன்களை அடைந்து கொள்ளாமை | 2.3.2(இ) |
| | | 5. | செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடுதல் | 2.3.2(ஈ) |
| | | 6. | 82 செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்வதில் தாமதம் | 2.3.2(உ) |
| | | 7. | நிதி விடுவிக்கப்பட்டிருந்தும் செயல்முன்னேற்றத்தை அடைந்து கொள்ளாத செயற்திட்டங்கள் | 2.3.2(ஊ) |
| | | 8. | பெறுகை நடவடிக்கைகள் போதியளவில் திட்டமிடப்படாமை | 2.5.1 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 9. | உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் அனைத்து கணக்காய்வு நடவடிக்கைகள் உள்ளடக்கப்படாமை | 2.17(அ) |
| | | 10. | பதவியணியினர்களுக்கு பயிற்சியளிப்பதில் குறைபாடு | 2.18(ஆ) |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணம் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய துணை அறிவுறுத்தல்கள் தமது திணைக்களத்தில் பின்பற்றப்படுகின்றன என்பதும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன என்பதும் | 1. | குறித்த நோக்கத்திற்காக உபகட்டுநிதிகள் வழங்குதலும் தீர்த்து வைப்பதில் தாமதமும் | 2.13(ஆ) |
| | | 2. | வைப்புக் கணக்குகளின் குறைபாடுகள் | 2.14 |
| | | 3. | பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை | 2.15 |
| | | 4. | இணக்கமின்மைகள் | 2.16 |
| | | 5. | முறையற்ற வகையில் ஏனைய தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள் | 2.18(அ) |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசாங்கத்தின் பொறுப்பில் பேணப்படுகின்ற பணம், பொருட்கள், உபகரணம் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பேணிப் பாதுகாப்பதற்காக போதியளவும் முறையானதுமான ஒழுங்குவிதிகள் பயன்படுத்தப்படுதல், அவை காலத்துக்குக் காலம் மெய்மையாய்வு செய்யப்படுகின்றன என்பதுவும் அவை முறைப்படியாக அகற்றப்படுகையில் அவ்வாறு அகற்றப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கும் ஆலோசனைகளுக்கும் இணங்க செய்யப்படுகின்றமை | 1. | சொத்துக்களை பதிவேடுகளுக்கு கொண்டு வருவதில் குறைபாடுகள் | 2.6(அ) |
| | | 2. | சொத்துக்கள் உச்ச வினைதிறனுடன் பயன்படுத்தப்படாமை | 2.6(ஆ) |
| | | 3. | வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்படாமை | 2.6(இ)(i) |
| | | 4. | வாகனங்களின் முறையற்ற பாவனை | 2.6(இ)(ii) |
| | | 5. | வாகனங்கள் மற்றும் அவற்றின் உபகரணங்கள் தொடர்பாக முழுமையாக மீளாய்வு செய்யப்படாமை | 2.6(இ)(iii) |
| | | 6. | கிரய செயற்றிறன் இன்றி சொத்துக்களை விற்றுத் தீர்த்தல் | 2.6(ஈ) |
| | | 7. | பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் | 2.6(உ) |

| | | | |
|---|---|---|---|
| | | 8. வருடாந்த பொருள் மெய்மையாய்வு செய்வதிலுள்ள குறைபாடுகள் | 2.6(ஊ) |
| | | 9. வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள் | 2.6(எ) |
| | | 10. ஏனைய தரப்பினர்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல் | 2.6(ஏ) |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அல்லது திறைசேரியால் வேண்டப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள், அறிக்கைகள் என்பவற்றை உரிய காலத்தில் சமர்ப்பித்தல் | 1. கட்டுநிதிக் கணக்கு மீதியை திறைசேரிக்குத் தீர்த்து வைப்பதில் தாமதம் | 2.13(அ) |
| | | 2. உள்ளகக் கணக்காய்வு அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்காமை | 2.17(ஆ) |
| 128(1)(ஏ) | நிலுவையாகக் காணப்பட்ட கட்டணங்கள் முதலியவற்றை அறவீடு செய்வதற்கு விசேட ஒழுங்கு விதிகளைப் பயன்படுத்துவதற்கு மற்றும் அந்த நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணம் தொடர்பாக அவற்றினை அறவீடு செய்வதனைத் துரிதப்படுத்துவதற்கு எடுக்கப்படுகின்ற முயற்சிகள் தொடர்பாக ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது ஏனைய தரப்பினர்களால் பணிக்கப்பட்டவாறு தமக்கு அறிக்கையிடுதல் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளின் கீழ் நிலுவையாகவிருந்த கடன் மீதிகளை அறவீடு செய்ய முடியாதிருந்தமை | 2.12(அ) |
| 128(ஐ) | அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், ஒழுங்கு, நேர்மை, ஆகிய விடயங்கள் தொடர்பாக முறையாக கவனம் செலுத்தி தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | 1. நிர்மாணங்களின் தரம் குறைவடைதல் | 2.4(அ) மற்றும் (ஆ) |
| | | 2. பெறுகை நடைமுறைகளில் குறைபாடு | 2.5.2 |
| | | 3. முகாமைத்துவ பலவீனம் | 2.9 |
| | | 4. பொதுமக்களுக்கு சேவை வழங்குவதில் பலவீனம் | 2.10 |

| | | | |
|---|---|---|---|
| | | 5. அமைச்சு மற்றும் திணைக்களத்தினால் அவற்றின் நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தும் போதான பற்றாக்குறைகள் | 2.11 |
| 128(1)(ஐ) | உத்தியோகத்தர்களின் / ஊழியர்களின் தாமதம், அலட்சியம், தவறு அல்லது மோசடியின் காரணமாக அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பங்களின் போது நிதிப்பிரமாணங்கள் 103 இலிருந்து 108 வரையான பிரமாணங்களில் நிர்ணயிக்கப்பட்டுள்ள நடைமுறைகள் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்பற்றப்படுகின்றன என்பதுவும் நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் சம்பந்தமாக பொறுப்பான உத்தியோகத்தர்கள் / ஊழியர்களை அடிப்படையாகக் கொண்டு மிகை அறவீடுகள் விதிக்கப்படுகின்றன என்பதுவுமாகும். | நட்டங்கள் மற்றும் சேதங்கள் ஏற்படுதல் | 2.7 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பணிகள்

(அ) மாவட்டத்தின் பிரதான நிர்வாக மையமாக நடவடிக்கை மேற்கொள்ளல்.

(ஆ) மாவட்டத்தின், சமய மற்றும் கலாச்சார உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(இ) மாவட்டத்தின் நிலைபேறான அபிவிருத்தியை நோக்கிப் பயணிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(ஈ) அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு இணங்க மாவட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(உ) பிரதேச செயலகங்களை மேற்பார்வை செய்தலும் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்

(ஊ) பதவியணியினர் பயிற்சியும் அபிவிருத்தியும்

(எ) மாவட்டத்தில் இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(ஏ) பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் மூலம் மாவட்டத்தில் இடம்பெறும் நடவடிக்கைகளைச் செயற்படுத்துதல்.

(ஐ) ஆயுதங்கள் மற்றும் வெடி பொருட்களுக்கு உத்தரவுப் பத்திரங்கள் வழங்குதல்.

(ஒ) பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகத்தின் நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(ஓ) சொத்துக்களின் நம்பிக்கைப் பொறுப்பையும் கட்டுப்பாட்டையும் உறுதிப்படுத்துதல்.

(ஔ) தேசிய மட்டத்திலான விழாக்களை ஒழுங்குபடுத்துதல்.

**2.2 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் அவற்றின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகள்**

மாவட்ட செயலகத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்டுள்ள நிறுவனங்களும் செயற்பாடுகளும் கீழே தரப்படுகின்றன.

| மாவட்ட செயலகத்தின் கீழுள்ள நிறுவனங்கள் | தோற்றுவிக்கப்படுவதற்கான அதிகாரம் | செயற்பாடுகள் |
|---|---|---|
| (i) நுவரெலியா பிரதேச செயலகம்<br>(ii) ஹங்குரன்கெத்த பிரதேச செயலகம்<br>(iii) அம்பகமுவ பிரதேச செயலகம்<br>(iv) கொத்மலை பிரதேச செயலகம்<br>(v) பலபனே பிரதேச செயலகம் | 1992 இன் 58 ஆம் இலக்க பிரதேச செயலகங்களைத் தோற்றுவிக்கும் அதிகாரச்சட்டம | மத்திய அரசாங்கத்தாலும் மாகாண சபைகளாலும் ஒப்படைக்கப்படுகின்ற நிர்வாக மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை பிரதேச மட்டத்தில் அமுல்படுத்துதல். |

**2.3 செயலாற்றல்**

**2.3.1 திட்டமிடல்**

மாவட்ட செயலகம் மற்றும் அதன் கீழ் தோற்றுவிக்கப்பட்டுள்ள 05 நியதிச்சட்ட நிறுவனங்கள் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காகத் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் சம்பந்தமாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் ஒவ்வொரு செயற்திட்டத்தையும் தனித்தனியாகக் காட்டி செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு மற்றும் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட திகதிகளும் செயற்திட்டங்களின் மதிப்பீட்டு பெறுமதியும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தை (Activity Plan) அமுல்படுத்தும் கால ஒழுங்கு (Time Line) மற்றும் அச்செயற்பாடுகளின் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடு / பெறுபேறு (output / outcome) மதிப்பீடு செய்யப்பட்டு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**2.3.2 செயற்பாடுகளை நிறைவேற்றாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றாமை**

சிறிய நிதி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 35 சனசமூக ஆதார வங்கிகளை இலாபம் ஈட்டும் வங்கிகளாக மாற்றுதல் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடாகக் காணப்பட்டது. 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 04 சனசமூக

ஆதார வங்கிகள் ரூபா 5.25 மில்லியன் கூட்டுமொத்தமான நட்டத்தை அடைந்திருத்தல்.

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்திருக்காமை**

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது மாவட்ட செயலகங்களின் உத்தியோகத்தர்களுக்காக ரூபா 700,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டு உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிக்கும் 10 நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 570,000 செலவு செய்து 07 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

**(இ) எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை (outcome) அடைந்து கொள்ளாமை**

இலங்கை மின்சார சபையின் மின்சாரம் துண்டிக்கப்படும் சந்தர்ப்பங்களில் தொடர்ச்சியாக மின்சாரத்தை அலுவலகங்களுக்குப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் ஹங்குரன்கெத பிரதேச செயலகத்தில் சூரிய மின்வலு முறைமையைத் தோற்றுவிப்பதற்காக ரூபா 1.84 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. எனினும், 2018 பெப்ரவரி 28 ஆந் திகதி வரை அக்குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடுதல்**

மீளாய்வாண்டின் போது மாவட்ட செயலகத்தால் 10 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ரூபா 8.18 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அச்செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் காலநிலையின் காரணமாக காலம் போதாமலிருந்ததனால் அச்செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டிருந்தன.

**(உ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவில் தாமதங்கள்**

மாவட்ட செயலகத்தால் மீளாய்வாண்டின் போது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட ரூபா 44.25 மில்லியன் பெறுமதியான 82 செயற்திட்டங்கள் உடன்படிக்கை செய்யப்பட்ட பின்னர் வேலைகள் ஆரம்பிக்காமை, மூலப்பொருட்களை வழங்குவதில் சிக்கல்கள், காணிகளை ஒப்படைப்பதில் தாமதம், சிறப்பற்ற காலநிலை ஆகிய காரணங்களின் அடிப்படையில் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட காலத்தில் பூர்த்தி செய்து கொள்வதற்கு முடியாதிருந்தது. அதற்கிணங்க 01 நாளிலிருந்து 125 நாட்கள் வரையிலான காலவீச்சுடைய தாமதங்களின் பின்னர் அச்செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

**(ஊ) பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் செயல்முன்னேற்றத்தை அடைந்து கொள்ளாத செயற்திட்டங்கள்**

நிர்மாணங்கள் சம்பந்தமாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கும் மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கும் மீளாய்வாண்டின் போது முழுப் பணமும் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிர்மாண நடவடிக்கை 2018 பெப்ரவரி 22 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. விபரம் கீழே தரப்படுகின்றன.

(i) அம்பலியத்த மேல் பகுதிக்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பிரதான குழாய் வழியை நீடிக்கும் செயற்திட்டத்திற்காக ஹங்குரன்கெத்த பிரதேச செயலகத்தால் 2017 திசெம்பர் 20 ஆந் திகதி ரூபா 1.48 மில்லியன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்குச் செலுத்தியிருந்த போதிலும் 2018 பெப்ரவரி 22 ஆந் திகதி வரை செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) வலப்பனை பிரதேச செயலகத்தின் நுழைவு வீதிக்கு காபட் இடுவதற்காக 2017 பெப்ரவரி 31 ஆந் திகதி ரூபா 1.95 மில்லியன் மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்டிருந்து. 2018 மார்ச் 02 ஆந் திகதி வரை அவ்வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மாவட்ட செயலகத்தால் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் அந்த அறிக்கை 2018 யூலை 01 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 உள்நாட்டு நிதியைப் பயன்படுத்தி அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டின் போது மாவட்ட செயலகத்தால் உள்நாட்டு நிதியைப் பயன்படுத்தி 1451 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ரூபா 656.85 மில்லியன் கூட்டுமொத்தமான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 598.96 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, ரூபா 57.89 மில்லியன் அல்லது வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டில் 9 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஹிங்குரன்கெத்த பிரதேச செயலகத்தின் நுழைவு வீதிக்கு துண்டுக் கற்கள் பிடிப்பதற்காக ரூபா 6.10 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. துண்டுக் கற்களின் அங்கீகரிக்கப்பட்ட உயரம் 80 mm ஆக இருக்க வேண்டிய போதிலும், அது 75 mm இலிருந்து 85 mm வரையான அதிக வீச்சினைக் கொண்டிருந்தன. கட்டிட அங்கீகரிக்கப்பட்ட விலை வீதங்களின் பிரகாரம், $1m^2$ இற்காக ரூபா 2,682 செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த விலை வீதங்களின் பிரகாரம் இடைச்செருகல் கல்லின் அகலம் 105 mm ஆக இருக்க வேண்டிய போதிலும் அது 102 mm இலிருந்து 106 mm வரையான வீச்சினைக் கொண்டிருந்தது. மேலும் துண்டுக் கல்லின் நீளம் 225 mm ஆக இருக்க வேண்டிய போதிலும் அது 202 mm இலிருந்து 205 mm வரையான வீச்சில் பரந்து காணப்பட்டதுடன் இருக்க வேண்டிய நீளத்தில் ஒரு இடைச்செருகல் கல்லேனும் (Interlock) நிர்மாணத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஹங்குரன்கெத்த பிரதேச செயலகத்தில் மோட்டார் வாகனத் தரிப்பிடம் உணவுச்சாலை, திறந்த வெளியரங்குக் கட்டிடம் என்பன ரூபா 8.39 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அக்கட்டிடத்தின் பௌதீக செயல்முன்னேற்றத்தை பரிசோதனை செய்த போது நிர்மாண நடவடிக்கைகளுக்காக சேற்றுடனான மிகவும் தூளான மணல் பாவிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அந்த மணல் கட்டிட நிர்மாணத்திற்குப் பொருத்தமற்ற தூள் மணல் என்பது ஆய்வுகூட பரிசோதனையின் போது உறுதிப்படுத்தப்பட்டது. கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரை மேற்கொள்ளப்பட்ட பூச்சு பூசுதலும் சேறு கலந்து காணப்பட்டதுடன் அதற்கிணங்க பூச்சு பூசுதலுக்காகவும் இம்மணல் பயன்படுத்தப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது ரூபா 65,000 மணலுக்காகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் மஹியங்கனையிலிருந்து மணலை எடுத்து வருவதற்காக 03 நிறுவனங்களுக்கு ரூபா 202,937 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 2.5 பெறுகை நடைமுறைகளின் மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்

### 2.5.1 பெறுகைகளைத் திட்டமிடல்

மாவட்ட செயலகத்தால் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 65.35 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 63.6 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டிற்காக தயாரிக்கப்பட வேண்டிய பெறுகைத் திட்டம் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) பெறுகைகளைத் திட்டமிடலும் தொடக்க படிமுறையும்**

காகிதாதிகளும் அலுவலக தேவைப்பாடுகளும் மற்றும் உணவும் சீருடைகளும் வழங்குவதற்காக ரூபா 10.05 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரை அவற்றில் ரூபா 9.85 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அந்நிதி ஏற்பாட்டை பயன்படுத்துவது தொடர்பான தகவல்கள் தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் போது மாவட்ட செயலகத்திற்கு 25 அமைச்சுக்களிலிருந்தும் 22 திணைக்களங்களிலிருந்தும் சனாதிபதி மற்றும் பிரதம மந்திரி அலுவலகங்களிலிருந்தும் ரூபா 692.71 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அந்நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல் பெறுகை நடைமுறைகளின் மூலம் இடம்பெற வேண்டிய போதிலும் அப் பெறுகைகள் தொடர்பான தகவல்கள் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஒப்பந்தத்திற்கு முன்னையதான கட்டம்**

பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுகின்ற மற்றும் பூர்த்தி செய்யப்படுகின்ற காலப்பகுதி பெறுகைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன. எனினும், 5 செலவு விடயங்களின் கீழ் வழங்கப்பட்டிருந்த ரூபா 14 மில்லியன் நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துவதற்கான பெறுகை நடவடிக்கைகளை திட்டத்தில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்குள் நிறைவேற்ற முடியாதிருந்தது. அந் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரை நடைபெற்றுக்கொண்டிருந்தன.

### 2.5.2 பெறுகை நடைமுறைகளை அமுல்ப்படுத்துதல்

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது தேசிய போட்டி கேள்வி மனுக்களைக் கோரும் நடைமுறை மற்றும் சந்தை விலைகளைக் கோரும் நடைமுறை பின்பற்றப்படுவதாக பெறுகைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களால் இடம் பெற்ற பெறுகை நடவடிக்கைகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் உச்ச அளவான போட்டித்தன்மையுடன் பொருத்தமான கேட்பு மனுக்களைத் தெரிவு செய்யும் நடைமுறைகளுக்கு முரணாக ரூபா 765.29 மில்லியன் பெறுமதியான 559 பெறுகைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. இதன் காரணமாக அரசாங்க பெறுகை வழிகாட்டிக்கோவையின் 1.2.1 (அ) மற்றும் 1.2.1 (இ) வழிகாட்டிகளை மீறி செய்யப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டன.

(ஆ) அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.3.1 வழிகாட்டியில் குறிப்பிடப்பட்ட ஒழுங்குவிதிகள் பின்பற்றப்படாது 81 பெறுகைகளக்காக கேட்பு மனுக்கள் கைகளால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.4.3 (அ) வழிகாட்டியின் பிரகாரம் அறிவித்தல்களை விளம்பரப்படுத்துதல் பொருளாதார ரீதியாக பாதகத்தன்மையுடைய குறைந்த பெறுமதியைக் கொண்ட தொடர்ச்சியாகப் பயன்படுத்துகின்ற பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக வழங்குனர்களைப் பதிவு செய்து அவர்களிடமிருந்து கேட்பு மனுக்களைக் கோரி பெறுகைகளை மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது. ஒரு பிரதேச செயலகத்தால் அந்த நடைமுறைகளைப் பின்பற்றாது அலுவலகத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள கடைகளிலிருந்து ரூபா 1.21 மில்லியன் பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஈ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.6 வழிகாட்டியின் பிரகாரம் மாதிரிகளை மீளாய்வு செய்தலும் அங்கீகரித்தலும் முற்தகைமைகளைப் பரீட்சிக்கும் ஆவணங்களையும் கேட்பு மனுக்கள் கோரும் ஆவணங்களையும் மீளாய்வு செய்து அங்கீகரித்தலும் தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. மாவட்ட செயலகத்தால் அமுல்ப்படுத்தப்பட்ட பெறுகை நடவடிக்கைகளின் போது அத்தேவைப்பாடுகளை நிறைவேற்றும் வகையில் பெறுகை நடவடிக்கைகளின் ஆரம்பத்திலேயே தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாது கேட்பு மனுக்கள் திறக்கப்பட்டதன் பின்னர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு நியமிக்கப்பட்டிருந்தது.

(உ) ஹங்குரன்கெத்த பிரதேச செயலக வளவில் நுழைவு வீதியை நிர்மாணிப்பதற்காக ரூபா 6.10 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் மற்றும் ICTAD GRADE 9 ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேட்பு மனுக்களைக் கோருதல் மற்றும் மாவட்ட செயலக பெறுகைக் குழுவுக்கு அனுப்பிவைக்கும் தேவைப்பாட்டைத் தவிர்த்துக் கொள்வதற்காக ஒப்பந்தத்தை நான்கு பகுதிகளாகப் பிரித்து நான்கு ஒப்பந்தக்காரர்கள் மூலம் நிர்மாண நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருந்தன.

(ஊ) ஹங்குரன்கெத்த பிரதேச செயலகத்தின் வாகன தரிப்பிடம் உணவுச் சாலை மற்றும் நிரந்தர வெளியரங்கு கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 8.39 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அக்கட்டிடத்தை நிர்மாணிக்கும் பெறுகை நடவடிக்கைகள் மாவட்ட செயலக பெறுகைக் குழுவால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. பிரதேச செயலகத்தால் அரசாங்க பெறுகை வழிகாட்டியின் 2.14.1 ஆம் வழிகாட்டிக்கு முரணாக அந்த ஒப்பந்தம் ரூபா 2 மில்லியனுக்கு குறையும் வகையில் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு பிரதேச செயலக பெறுகைக் குழுவால் பெறுகை நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டு ஒப்பந்தத்தை வழங்கி உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(எ) மாவட்ட செயலகம் மற்றும் 5 பிரதேச செயலகங்களால் 2017 ஆம் ஆண்டிற்காக வழங்குனர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர். அந்த பதிவு செய்யும் நடவடிக்கை முடிவுறுத்தப்பட்ட திகதிக்குப் பின்னர் கிடைத்த மேலும் 63 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு மீளாய்வாண்டின் போது அந்த வழங்குனர்களிடமிருந்து ரூபா 12.18 மில்லியன் தொகையான கொள்வனவுகள் செய்யப்பட்டன.

(ஏ) அம்பகமுவ பிரதேச செயலகத்திற்குரிய நீதியாகல கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள கினிகத்ஹேன அலகல கீழ்ப் பகுதியின் வீதியை அபிவிருத்தி செய்யும் ஒப்பந்தமானது ரூபா 1.02 மில்லியன் பெறுமதிக்கு ஒரு தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. உரிய பெறுகை நடவடிக்கைகளுக்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையில் ஒரு அங்கத்துவர் மாத்திரம் கையொப்பம்மிட்டிருந்தார். தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகச் செயற்பட்ட உதவிப் பணிப்பாளர் மற்றும் சமுர்த்தி முகாமையாளரான மற்றுமொரு அங்கத்துவர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் கூட்டத்திற்காகப் பங்குபற்றியிருக்கவில்லை.

(ஐ) ஹங்குரன்கெத்த பிரதேச செயலகத்தால் அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.3.6 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் கேட்பு மனுக்களைத் திறப்பது சம்பந்தமான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஒ) ஹங்குரன்கெத்த பிரதேச செயலகத்தால் வியாபாரப் பெயர்களைப் பதிவு செய்யும் சான்றிதழ் சமர்ப்பிக்காத 18 நிறுவனங்கள் வழங்குனர்களாகப் பதிவு செய்து கொண்டிருந்தன.

(ஓ) நிறுவனங்களின் வியாபாரத்தை பதிவு செய்தல்களின் பிரகாரம் அவர்களின் வழக்கமான வியாபாரத்தை கவனத்தில் கொள்ளாது ரூபா 250 செலுத்தி எந்த ஒரு நிறுவனமும் எந்த ஒரு பொருளின் கீழ் பதிவு செய்து கொள்வதற்கு ஹங்குரன்கெத்த பிரதேச செயலகம் 07 சந்தர்ப்பங்களில் நடவடிக்கை எடுத்திருந்தது.

(ஔ) ஹங்குரன்கெத்த பிரதேச செயலகத்தால் 2017 ஆம் ஆண்டில் நிவாரணம் பெறுபவர்களை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொருட்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக பெறுகைக் குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டிய நிறுவனங்களை உறுதியாகக் குறிப்பிட்டு பெறுகைத் தீர்மானம் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகக் குறைந்த விலையின் கீழ் பொருத்தமான பொருட்களைக் கொள்வனவு செய்யும் தீர்மானம் தெளிவில்லாமையின் காரணமாக அரசாங்கத்திற்கு ரூபா 189,495 நிதி ரீதியான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஃ) ஹங்குரன்கெத்த பிரதேச செயலகத்தால் திரைச்சீலைகளைக் கொள்வனவு செய்வதற்காக 2017 ஆகஸ்ட் 11 ஆந் திகதி ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து கேள்வி மனு கோரப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் மாதத்தின் போது இதற்காக ரூபா 499,850 செலுத்தப்பட்டிருந்தும் கணக்காய்வுத் திகதியான 2018 பெப்ரவரி 20 ஆந் திகதி வரை திரைச்சீலை உரிய அலுவலகங்களில் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(க) ஹங்குரன்கெத்த பிரதேச செயலகத்தால் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வர்ணப்பூச்சுக்களை கொள்வனவு செய்வதற்காக பெறுகைத் தீர்மானத்தின் பிரகாரம் கேட்பு மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. பதிவு செய்யப்பட்ட வழங்குனர் அல்லாத தனியார் நிறுவனத்திற்கு ரூபா 177,425 செலுத்தி வர்ணப் பூச்சுக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(கா) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.6 வழிகாட்டியின் பிரகாரம் கேட்பு மனுக்களைக் கோரும் போது வகை மற்றும் வியாபாரப் பெயர்களைக் குறிப்பிடலாகாது என்ற போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தாது மாவட்ட செயலகத்தால் வகை மற்றும் வியாபாரப் பெயர்களைக் குறிப்பிட்டு கேட்பு மனுக்களைக் கோரி ரூபா 120,800 செலவு செய்து அந்த வியாபார பெயரின் கீழ் மடிக்கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## 2.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

மாவட்ட செயலகத்தின் சொத்துக்கள் சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

### (அ) சொத்துக்களை பதிவேடுகளில் பதிதல்

2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் தொடர்பான தகவல்களை உரிய நிறுவனங்களின் பிரகாரம் 2017 நவம்பர் 30 ஆந் திகதியளவில் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டியிருந்தது. அத்தகவல்கள் 2018 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை மாவட்ட செயலகத்தால் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு தெரியப்படுத்தியிருக்காததுடன் கட்டிடங்களை மதிப்பீடு செய்யும் நடவடிக்கையும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) அரசாங்கத்திற்குச் சொந்தமான சொத்துக்களை உச்ச அளவு வினைத்திறனுடன் பயன்படுத்தாமை**

2015 சனவரி 01 ஆந் திகதியின் பின்னர் கொங்ரீட் வீதிகளின் கன அளவைப் பரீட்சித்தல் மாவட்ட செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் ரூபா 500,000 செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்ட பரிசோதனைத் தொகுதியும் ரூபா 166,915 தொகையான கொங்ரீட் தட்டும் பாதுகாப்பின்றி களஞ்சியத்தில் துருப்பிடித்துக் காணப்பட்டன.

**(இ) வாகனப் பயன்பாடு**

மாவட்ட செயலகத்திற்கு மீளாய்வாண்டின் இறுதியளவில் பின்வருமாறு 26 வாகனங்கள் காணப்பட்டதுடன் அவ்வாகனங்கள் 406,181 கிலோ மீற்றர்கள் ஓடியிருந்தன. அதற்காக எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணைகளுக்காக ரூபா 3,861,958 தொகையும் வாகனங்களை சேவிஸ் செய்வதற்காக 1,256,432 தொகையும் வாகன பழுதுபார்த்தலுக்காக ரூபா 4,656,894 தொகையும் வாகனங்களை காப்புறுதி செய்வதற்காக ரூபா 1,520,844 தொகையுமாக ரூபா 11,296,126 மொத்த தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க மாவட்ட செயலகத்தால் வாகனங்கள் ஓட்டுவதற்காக சாரதி சம்பளங்களையும் படிகளையும் தவிர்த்து ஒரு கிலோ மீற்றருக்கு ரூபா 28 செலவு செய்யப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்படாமை**

2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. மாவட்ட செயலகம் மற்றும் நுவரெலியா, கொத்மலை, அம்பகமுவ வலப்பனை ஆகிய பிரதேச செயலகங்களுக்குச் சொந்தமான 12 வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பான பரிசோதனை இடம்பெற்றிருக்கவில்லை.

**(ii) வாகனங்களின் முறையற்ற பாவனை**

2017 செப்தெம்பர் மாதத்திலிருந்து திசெம்பர் மாதம் வரையான காலத்துள் 04 வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணையின் பிரகாரம் அவ்வாகனங்களை இரவு வேளையில் நிறுத்தி வைத்தல் மாவட்ட செயலகம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் 50 சந்தர்ப்பங்களின் போது இரவு வேளைகளில் அவ்வாகனங்கள் மாவட்ட செயலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டன. என்பது அலுவலகத்தின் பாதுகாப்பு பிரிவினால் பேனப்பட்ட பதிவேடுகள் உறதிப்படுத்தியிருக்கவில்லை.

**(iii) வாகனங்கள் மற்றும் வாகனங்களின் உபகரணங்கள் தொடர்பான முழுமையான மீளாய்வு**

மாவட்ட செயலகத்தின் 09 வாகனங்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 1647(ஆ) இன் பிரகாரம் 2018 யூன் 17 ஆந் தகதி வரை வாகனங்கள் மற்றும் அவற்றின் உபகரணங்கள் தொடர்பாக முழுமையான மீளாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) கிரயம் மற்றும் வினைத்திறனின்றி சொத்துக்களை அகற்றுதல்**

சமூக அபிவிருத்தி மற்றும் வாழ்வாதாரங்களை மேம்படுத்துதல் செயற்திட்டத்தின் கீழ் பயன்படுத்தப்பட்ட கணனி, துணைக் கருவிகள் மற்றும் மின்சார உபகரணங்களை மாவட்ட செயலகத்திற்கு வழங்கும் போது எந்த உபகரணம்

சம்பந்தமாகவும் தொடர் இலக்கம் (serial No) பொருள் இருப்பு பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இப்பொருள் இருப்பு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத பொருள் இருப்பாக பௌதீகப் பரிசோதனையின் போது இனங்காண முடியாத வகையில் சில பொருட்கள் மாத்திரம் களஞ்சியத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தன. அப்பொருட்களை திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு அல்லது முறைப்படி அகற்றுவதற்கு மாவட்ட வெயலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(உ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

i. கீழே வகைப்படுத்தப்பட்டவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | பெறுமதி | பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலம் |
|---|---|---|---|
| | | ரூபா | ஆண்டு |
| • கட்டிடம் | 02 | மதிப்பீடுசெய்யப்படவில்லை | 05 |
| • மோட்டர்ஸ் வாகனம் | 24 | - மேற்படி - | 10 |
| • இயந்திரங்கள் | 02 | - மேற்படி - | 10 ஆண்டுகளுக்கு மேல் |

(ii) மாவட்ட செயலகத்தால் பல்வேறு சந்தர்ப்பங்களின் போது கொள்வனவு செய்யப்பட்ட பின்வரும் சொத்துக்கள் ஒரு சந்தர்ப்பத்திலேனும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டன.

| சொத்துக்களின் வகை | கொள்வனவு செய்த திகதி | பெறுமதி |
|---|---|---|
| | | ரூபா |
| • கொங்ரீட் ஹெமர் | 2015.12.08 | 216,450 |
| • மோல்டர்ங் | 2015.12.08 | 25,200 |
| • ஸ்லம்ப் பரிசோதனை உபகரணங்கள் | 2015.12.08 | 9,500 |
| • நீளம் அளத்தல் உபகரணங்கள் | 2015.12.08 | 15,000 |
| • மட்டம் செய்தல் உபகரணங்கள் | 2015.12.08 | 36,000 |
| • ICTAD வெளியீடுகள் | 2015.12.15 | 40,830 |

**(ஊ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் சமூக அபிவிருத்தி மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் செயற்திட்டத்தின் கீழ் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 ஆந் திகதியின் பின்னர் இருப்பு மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) 2015 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வில் ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டியதாகவும் அகற்றப்பட வேண்டியதாகவும் இனங்காணப்பட்டு 2016 மே 27 ஆந் திகதி நடாத்தப்பட்ட ஏல விற்பனையில் அகற்றப்பட்ட அரசாங்க அதிபதியின் உத்தியோகபூர்வ வதிவிடத்திலுள்ள 20 வகையான பொருட்கள் நிதிப்பிரமானம் 772(3) இன் பிரகாரம் இருப்பேட்டிலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2015 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மைய்வின் போது அரசாங்க அதிபரின் உத்தியோகபூர்வ வதிவிடத்தில் மிகைப்பொருட்களாக இனங்காணப்பட்ட 21 வகையான பொருட்களையும் மாவட்ட செயலகத்தில் மிகையான பொருட்களாக இனங்காணப்பட்ட 07 வகையான பொருட்களையும் உரிய அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டு ஏடுகளில் உள்ளடக்குவதற்கு 2018 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(எ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

மாவட்ட செயலகத்தால் சில சொத்துக்கள் முறையற்ற வகையில் வெளித்தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் கீழே தரப்படுகின்றது.

| | சொத்துக்களின் வகை | சொத்துக்களின் எண்ணிக்கை / அலகுகளின் எண்ணிக்கை / அளவு | சொத்துக்கள் வழங்கப்பட்டுள்ள நிறுவனம் | பெறுமதி | காலப்பகுதி |
|---|---|---|---|---|---|
| | | | | ரூபா | ஆண்டு |
| (i) | கட்டிடம் | 03 | நுவரெலியா மாநகரசபை | 19,550,000 | 01 |
| | | | திவிநெகுமஅபிவிருத் தி திணைக்களம் | மதிப்பிடப்படவில்லை | 09 |
| | | | மத்திய வங்கி | மதிப்பிடப்படவில்லை | 02 |
| (ii) | மோட்டார் வாகனம் | 03 | தொழில்நுட்பக் கல்லூரி பதுளை/ நுவரெலியா | மதிப்பிடப்படவில்லை | 01 |

**(ஏ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமாகக் காணப்பட்ட சில சொத்துக்கள் முறையான அங்கீகாரமின்றி மாவட்ட செயலகத்தால் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டன. விபரம் கீழே தரப்படுகின்றது.

| | சொத்துக்களின் வகை | சொத்துக்களுக்குச் சொந்தமான நிறுவனம் | எண்ணிக்கை, அலகுகள் அல்லது அளவு | பெறுமதி | காலப்பகுதி |
|---|---|---|---|---|---|
| | | | | ரூபா | ஆண்டு |
| (i) | காணி (ஹெக்டெயர்) | மஹாவலி அதிகார சபை | 1,495 | மதிப்பீடுசெய்யப்படவில்லை. | 27 |
| (ii) | மோட்டார் வாகனம் | ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 01 | மதிப்பீடுசெய்யப்படவில்லை. | 03 |
| | | விவசாய அமைச்சு | 01 | 2,000,000 | 14 |

## 2.7 நட்டங்களும் சேதங்களும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 5 பிரதேச செயலாளர்களால் வீதிகளை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்த மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது வீதி நியம் விலை விகிதங்களைப் (HSR) பயன்படுத்துவதற்குப் பதிலாக கட்டிட நியம விலை விகிதங்களைப் (BSR) பயன்படுத்தியதன் காரணமாக 198 ஒப்பந்தங்களின் மாதிரிகளைப் பரீட்சித்த போது ரூபா 12.12 மில்லியன் தொகையான மிகை மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த மிகை மதிப்பீட்டுப் பெறுமதிக்கு அங்கீகரித்த சங்கத்துக்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டதன் காரணமாக அச் செயற்திட்டங்களுக்காக மிகைக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) அகில இலங்கை தஹம் பாடசாலை மாணவர்களின் திறன்களை மதிப்பீடு செய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு 2017 திசெம்பர் 27 ஆந் திகதி பால் உணவை வழங்கும் செலவுகள் இரண்டு தனிநபர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தும் அதற்காக ரூபா 200,000 ஒரு தனியார் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) அகில இலங்கை தஹம் பாடசாலை மாணவர்களின் திறன்களை மதிப்பீடு செய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு 2017 திசெம்பர் 25 ஆந் திகதி இரவு, 26 ஆந் திகதி காலை, பகல் இரவு மற்றும் 27 ஆந் திகதி காலை உணவுகளை வழங்குவதற்கு தேவையான அனைத்து பொருட்களையும் கொள்வனவு செய்வதற்காக ரூபா 414,125 மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் அந்த உவுகளை வழங்குவதற்காக ரூபா 618,202 செலவு செய்து பொருட்களை கொள்வனவு செய்ததன் காரணமாக மதிப்பீட்டினை மிகைத்து ரூபா 204,077 மிகைக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதி வரை 05 வாகன விபத்துக்கள் தொடர்பாக ரூபா 1.88 மில்லியன் கூட்டு மொத்தமான நட்டம் ஏற்பட்டிருந்தது. அந்த நட்டத்துள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக ரூபா 1.32 மில்லியன் நட்டம் காணப்பட்டு வருகின்ற போதிலும் அந்த நட்டங்களை அறவீடு செய்வதற்கு அல்லது பதிவழிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை முடியாதிருந்தது.

## 2.8 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

மாவட்ட செயலகத்திற்குரிய முன்னைய ஆண்டுகள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் சம்பந்தமாக அலுவலகத்தால் சரிசெய்யப்படாத பந்திகளுக்கான தொடர்பு கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு | | தொடர்புபட்ட விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2016 | 3.2 (ஆ), (இ),(ஈ), (உ), (ஊ) | மாவட்ட செயலகத்தில் நிர்மாணிக்கப்பட்ட செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமை நிர்மாணங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாமை, பொது மக்களின் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளக்கூடிய வகையில் நிர்மாணங்கள் பூர்த்திசெய்யப்படாமை என்பன |
| 2016 | 3.2 (ஓ) | கொங்ரீட் கலவைக்காக நிர்ணயிக்கப்பட்ட சிறுகற்கள் பயன்படுத்தப்படாமை |
| 2016 | 3.2 (ஔ) (க) | நிர்மாணத்திற்காக மிகைக் கொடுப்பனவுகள் மேற்கொண்டமை, பௌதீகப் பரிசோதனைக்கு உட்படுத்தாது தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒப்பந்த விலைப் பட்டியல்களைச் சமர்ப்பித்தமை |
| 2016 | 3.10 (அ) (vi) | பெறுகைகளை நிறைவேற்றும் போது தேசிய போட்டி கேட்பு மனுக்களை கோருவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| 2015 | 3.10(உ) | முறையற்ற வகையில் செயற்திட்டங்களை நிறைவேற்றியிருந்த சந்தர்ப்பங்கள் |
| 2015 | 3.12(iii) | தேசிய போட்டி கேட்பு மனுக்களைக் கோராது சந்தை ஒப்பீட்டு முறைமை ஈடுபடுத்தப்படல் |
| 2014 | 3.4.2(ஆ) | போதியளவு நிதி இயலுமை இல்லாத சங்கங்களுக்கு ஒப்பந்தங்கள் வழங்குதல் |

## 2.9 முகாமைத்துவ பலவீனம்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் விசேட செயற்திட்டத்தின் கீழ் அம்பகமுவ பிரதேச செயலகத்தினால் 09 தொழிற்சாலைகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 13.00 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 08 ஆந் திகதி வரை உரிய தொழிற்சாலையில் பௌதீக செயல் முன்னேற்றம் 25 சதவீதத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(ஆ) 2017 சனவரி 12 ஆந் திகதிய MWCA/WB/தி.ம.தி/2017 ஆம் இலக்க இலங்கை மகளிர் பணியக பணிப்பாளரின் கடிதத்தின் பிரகாரம் ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கு மகளிர் செயற்பாட்டுச் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டியிருந்தது. கொத்மலை மற்றும் நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவுகளில் காணப்பட்ட 166 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 109 பிரிவுகளில் மாத்திரம் மகளிர் செயற்பாட்டுச் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டிருந்தன.

(இ) 2017 சனவரி 12 ஆந் திகதிய MWCA/WB/தி.ம.தி/2017 இலக்க இலங்கை மகளிர் பணியகத்தின் பணிப்பாளரின் கடிதத்தின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் பெண்களின்

பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கான தீர்வுகள், தொழில் வாய்புக்கள் செயற்திட்டங்களின் எண்ணிக்கை என்பவற்றை உள்ளடக்கி 2018 – 2017 ஆண்டிற்காக மகளிர் செயற்பாட்டுச் சங்க திட்டம் தயாரிக்கப்பட்டு 2017 சனவரி 31 ஆந் திகதிக்கு முன்னர் இலங்கை மகளிர் பணியகத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. 2017 நவம்பர் 30 ஆந் திகதி வரை அத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாவட்ட செயலகத்தின் கீழ் உள்ள 03 பிரதேச செயலகங்களினால் கொள்வனவு செய்யப்பட்ட 46 வகையான பொருட்கள் உரிய நலன் பெறுனர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படாது 2018 பெப்ரவரி 28 ஆந் திகதி வரை களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட்டன.

(உ) வலப்பனை பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட 125 சிறுவர் சங்கங்களில் 71 சிறுவர் சங்கங்கள் மாத்திரம் செயற்படும் நிலையில் காணப்பட்டன. அச்சிறுவர் சங்கங்களில் 11 சிறுவர் சங்கங்கள் மாத்திரம் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தில் பதிவு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஊ) வலப்பனை பிரதேச செயலகப் பிரிவில் 107 மகளிர் அமைப்புக்கள் காணப்பட்டதுடன் அவற்றில் 20 அமைப்புக்களை பதிவு செய்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

(எ) விதவைகள் மற்றும் வீட்டை ஆதாரமாகக் கொண்ட மகளிர் தொடர்பான தரவு முறைமைக்கு தரவுகளைச் சேகரிப்பதற்காக 2017 ஏப்ரல் 19 ஆந் திகதிய MWCA/04/01/07/2017 - II ஆம் இலக்க மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான காலத்திற்காக விதவைகள் மற்றும் வீட்டை ஆதாரமாகக் கொண்ட மகளிர் தொடர்பான தரவுகளைச் சேகரிக்கும் நடவடிக்கை 2017 யூன் 30 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது நுவரெலியா பிரதேச செயலகத்தில் 2017 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரை 2013 ஆம் ஆண்டிற்கான தரவுகளைச் சேகரித்தல் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நுவரெலியா மாவட்டத்தில் திவினெகும சமூக அடிப்படை வங்கிகளில் 22 வகையான கணக்குகளில் ரூபா 71.80 மில்லியன் தொகையான அறவிடமுடியாக் கடன் மீதியும் 17 வகையான கணக்குகளுக்குரிய ரூபா 45.74 மில்லியன் தொகையான காலங்கடந்த கடனும் காணப்பட்டன.

(ஐ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்உவாறு நுவரெலியா மாவட்டத்தில் திவினெகும சமூக அடிப்படை வங்கிகளில் ரூபா 68.08 மில்லியன் செயற்பாடற்ற கணக்கு மீதிகள் காணப்பட்டன.

**2.10 பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுதல்**

---

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) காணி சம்பந்தமாக தமக்கு ஏற்பட்டுள்ள சிக்கல்கள் மற்றும் ஏற்பட்டுள்ள நியாயமின்மைகள் சம்பந்தமாக மாவட்ட செயலாளருக்கு 2016 ஆம் ஆண்டிலிருந்து பொதுமக்களால் மேற்கொள்ளப்பட்ட 105 முறைப்பாடுகள் மற்றும் 37 ஏனைய முறைப்பாடுகளும் இரகசிய முறைப்பாடுகளும் சம்பந்தமாக தீர்வுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. முறைப்பாடு சம்பந்தமாக முறைப்பாடு செய்த திகதி, முறைப்பாடு செய்யப்பட்டவர் பற்றி, எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளும் தீர்மானங்களும் சம்பந்தமாக முழுமையான தகவல்களைப் பதிவு செய்து பதிவேடு ஒன்று முறைப்படியாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வலப்பனை மற்றும் நுவரெலியா பிரதேச செயலகத்திற்கு கிடைத்த பொது மக்களின் முறைப்பாடுகள் அனைத்தும் ஒரு கோவையில் இணைத்து வைத்தல் மாத்திரம் இடம் பெற்றிருந்ததுடன் அது சம்பந்தமாக அலுவலகத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.11 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்தில் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2013** | மீண்டுவருபவை | 340.88 | 328.86 | 12.02 | 3.53 |
| | மூலதனம் | 58.35 | 53.93 | 4.42 | 7.57 |
| | மொத்தம் | 399.23 | 382.79 | 16.44 | 4.11 |
| **2014** | மீண்டுவருபவை | 378.65 | 332.25 | 46.40 | 12.25 |
| | மூலதனம் | 44.65 | 42.72 | 1.93 | 4.32 |
| | மொத்தம் | 423.30 | 374.97 | 48.33 | 11.42 |
| **2015** | மீண்டுவருபவை | 435.30 | 423.75 | 11.55 | 2.65 |
| | மூலதனம் | 50.00 | 35.40 | 14.60 | 29.20 |
| | மொத்தம் | 485.30 | 459.15 | 26.15 | 5.38 |
| **2016** | மீண்டுவருபவை | 447.00 | 439.65 | 7.35 | 1.64 |
| | மூலதனம் | 99.00 | 83.46 | 15.54 | 15.70 |
| | மொத்தம் | 546.00 | 523.12 | 22.88 | 4.19 |
| **2017** | மீண்டுவருபவை | 440.86 | 436.40 | 4.46 | 1.01 |
| | மூலதனம் | 73.65 | 71.67 | 1.98 | 2.69 |
| | மொத்தம் | 514.51 | 508.07 | 6.44 | 1.25 |

**ஏனைய அமைச்சுக்கள் திணைக்களங்கள் மாவட்ட செயலகங்கள் என்பவற்றால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்.**

25 ஏனைய அமைச்சுக்கள், 22 திணைக்களங்கள் சனாதிபதி மற்றும் பிரதம மந்திரி அலுவலகங்கள் என்பவற்றால் பல்வேறு செயற்பாடுகளுக்காக மாவட்ட செயலகத்தில் ரூபா 1,758.77 மில்லியன் கூட்டு மொத்த நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் அவற்றில் ரூபா 1,649.32 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 109.45 மில்லியன் அல்லது 6.22 சதவீதமான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நுவரெலியா மாவட்டத்திலுள்ள 05 பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள 491 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் மீளாய்வாண்டின் போது அமுல்ப்படுத்துவதற்காக 1429 செயற்திட்டங்கள்

அங்கீகரிக்கப்பட்டிருந்தன. அதற்காக ரூபா 606.36 மில்லியன் நிதி ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அச் செயற்திட்டங்களில் 1404 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. ரூபா 5.61 மில்லியன் மதிப்பீட்டு கிரயமான 10 செயற்திட்டங்கள் இரத்துச்செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 9.71 மில்லியன் மதிப்பீட்டு கிரயமான 13 செயற்திட்டங்களின் செயல் முன்னேற்றம் 50 சதவீதத்தினை விடக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. மேலும், ரூபா 1.14 மில்லியன் மதிப்பீட்டு கிரயமான 02 செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தும் நிலையில் காணப்படவில்லை.

(ஆ) 2016 சனவரி 12 ஆந் திகதிய 1/2016 ஆம் இலக்க சமூகதத்தை வலுப்படுத்துதல் மற்றும் நலன்புரி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவில் முதியோர் படிகளுக்கு தகமையுள்ள நலன் பெறுநர்களின் எண்ணிக்கை 5,169 ஆக இருந்தது. ஆண்டு தொடக்கத்தில் அந்த எண்ணிக்கையை நிரந்தரமாகப் பேணுவதற்காக நீக்கப்பட்ட பெயர்களுக்குப் பதிலாக பதிவேட்டில் அதற்கு அடுத்த தகைமை பெற்றுள்ள நபர் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக ஆண்டின் இறுதியில் ரூபா 6.79 மில்லியன் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) நுகவெல கிராமத்திற்கான நுழைவு வீதியில் அனர்த்தத்திற்கு உள்ளாகியுள்ள பகுதிக்கு பாதுகாப்பு சுவரையும் வடிகால் முறைமையையும் தயார்படுத்துவதற்கு கொத்மலை பிரதேச செயலகத்திற்கு ரூபா ஒரு மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் அனர்த்தத்திற்கு உள்ளாகியுள்ள இடங்களில் சுவர்களில் ஒரு பகுதி மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(ஈ) தேசியக் கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சிடமிருந்து ரூபா 350,000 தொகையான நிதி ஏற்பாடு மாவெலகந்த பானகல கால்வாயை புனரமைத்தல் வேலைக்காக கொத்மலை பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தி வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. தடைப்பட்டு இருந்த கால்வாயை தயார்படுத்தி பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு கணக்காய்வுத் திகதியான 2018 சனவரி 24 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக வேலைகளின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் குடிநீர் மற்றும் விவசாயத்திற்கான நீர்த் தேவைப்பாட்டை அடைந்துகொள்ளும் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(உ) நுவரெலியா பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் 10 வீதிச் செயற்திட்டங்களுக்கு கொங்ரீட் இடுவதற்கு தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சிடமிருந்து நுவரெலியா பிரதேச செயலகத்திற்கு ரூபா 4.42 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. வீதிச் செயற்திட்டமானது 1.2.4 என்ற கலவையில் கொங்ரீட் இடுவதற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தும் அதற்காக 19 mm சல்லிக் கல்லுக்கும்ப் பதிலாக 25 mm சல்லிக் கல் பயன்படுத்தப்பட்டு ரூபா 733,319 மிகைக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) நுவரெலியா பிரதேச செயலகத்தின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள திம்புல புரஸ்ட்கிரிக் வீதியை நிர்மாணிப்பதற்காக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சிடமிருந்து ரூபா 500,000 நிதி ஏற்பாடு மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. 65.5 மீற்றர் அளவான வீதி நிர்மாணிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டு ரூபா 464,375 செலுத்தப்பட்டிருந்தது. வீதியின் பௌதீகப் பரிசோதனையின் போது 218 சனவரி 19 ஆந் திகதி வரை 61 மீற்றர் அளவில் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 20,182 மிகைக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. நிர்மாணிக்கப்பட்டதில் 1x1 மீற்றர் அளவான பகுதி வெடித்துக் காணப்பட்டது.

(எ) வித்தியாசக்ர வித்தியாலயத்திற்குச் செல்லும் வீதியை நிர்மாணிப்பதற்காக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சிடமிருந்து ரூபா 50,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. பிரதேச செயலகத்தால் அந்த நிதி ஏற்பாட்டில் ரூபா 491,734 செலவு செய்து வீதி நிர்மாணிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2018 சனவரி 17 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவ்வீதியில் 10 மீற்றர் அளவான பகுதியில் 2` அடி அகலமுள்ள பகுதி மழை நீரில் அடித்துச் செல்லப்பட்டதனால்

கொங்ரீட் தளம் மாத்திரம் எஞ்சியுள்ளது. அவ்வீதியின் ஒரு பகுதியின் கனஅளவு 4'' ,4 ½ '' மற்றும் 5'' ஆகக் காணப்பட்டது. எனவே இந்த வீதியின் கனஅளவு மீண்டும் பரிசோதனை செய்ய வேண்டியதாக இருந்தது. வீதி நீரில் அடித்துச் செல்லப்படும் பகுதிக்கு அணை கட்டாமையால் எந்த வாகனத்திற்கும் வீதியை பயனத்திற்கு பயன்படுத்த முடியாதிருந்தது.

(ஏ) திம்புல குடிநீர் திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்காக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சிடமிருந்து ரூபா 1.30 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட ரூபா 12,730 தொகையான அத்தியாவசியமான 03 விடயங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தக்காரரால் வேண்டப்படாது ரூபா 63,374 தொகையான விலைப்பட்டியல் திருத்தப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது. அபிவிருத்தி உத்தியோகத்தரின் அறிக்கையின் பிரகாரம் நிர்மாண வேலைக்கு பயன்படுத்தப்படாத நீர்க்குழாய்களுக்காக ரூபா 287,820 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஐ) ''விஜிரபுர புலுஎல உத்தியோகபூர்வ இல்ல'' கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிடமிருந்து ரூபா 1.50 மில்லியன் நிதி ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. நுவரெலியா பிரதேச செயலகத்தால் அக்கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2018 சனவரி 16 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது தூணுக்கு அருகாமையிலுள்ள சுவர், தூணிலிருந்து விலகி வெடித்துக் காணப்பட்டது. மேலும் 16 mm அளவாக இருக்க வேண்டிய பூச்சு 10 mm மற்றும் அதற்கு குறைந்த அளவிலான இடங்கள் காணப்பட்டதுடன் மஹியங்கனை மணல் நிர்மாண வேலைக்கு பயன்படுத்துவதற்காக போக்குவரத்துக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்ததும் சுவர்களின் ஒரு பகுதிக்கு சேற்றுடனான மணல் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஒ) சிறீ தர்ம விஜயாராம விகாரையில் சுகாதார வசதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைக்காக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் ரூபா 485,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அந்த வேலை 2017 யூன் 20 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டு விலைப்பட்டியல்கள் நுவரெலியா பிரதேச செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. நிர்மாண வேலையை பூர்த்திசெய்தலானது திருப்தியான நிலையில் இருக்கவில்லை என்பது 2018 சனவரி 16 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரீசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. கொஙகிரீட் இடுவதற்காக ரூபா 88,223 செலுத்தப்பட்டிருந்தும் கொங்ரீட் முறையாக அமுக்கப்படாமையின் காரணமாக தேன் வதைக் குறைபாடு (Honny Comes) காணப்பட்ட சந்தர்ப்பங்களும் கொங்ரீட்டிற்கு மத்தியில் கம்பிகள் மூடப்படாதிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. கொங்ரீட் கலவை பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(ஓ) கொரட்ஹெல லைசன் பாலம் மற்றும் வீதியைப் புனரமைப்புச் செய்யும் வேலைக்காக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் ரூபா 1.48 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. நுவரெலியா பிரதேச செயலகத்தால் அந்த வேலை நிறைவேற்றப்பட்டிருந்தது. வீதியின் 120 மீற்றர் நீளத்திற்கு நிலத்தை தயார்படுத்துதல். (Eartha Excavation) பொலித்தீன் விரித்தல், தடுப்பு பலகை அடித்தல் என்பன இடம்பெற்றிருந்தும் வீதியின் 144.2 மீற்றர் நீளத்திற்கு கொங்ரீட் போடப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2018 சனவரி 16 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது வீதியின் நீளம் 137.5 மீற்றராக இருந்ததுடன் அதில் வீதியின் ஒரு பகுதியின் கனஅளவு 6''இல்லாத இடங்களும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. வீதியின் ஓரத்தில் ரூபா 335,453 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட பாலத்தின் இரண்டு பக்கங்களிலுள்ள தடுப்பு அணை மற்றும் அடிப்பாகத்தின் கொங்ரீட் தளத்தின் வேலைப் பூர்த்தியானது பலவீனமான நிலையில் காணப்பட்டது. நிலத்தில் கொங்ரீட் தளம் இட்டு அதன் மீது நிர்மாணிக்கப்பட வேண்டிய தடுப்பு அணைக்குப் பதிலாக நிலத்தின் மேல் பகுதியில் இடப்பட்டிருந்த கொங்ரீட் தளத்தின் கீழ் பகுதி 2018 சனவரி 18 ஆந் திகதியளவலில் நீரில் அடித்துச் செல்லப்பட்டு பாதிப்புக்கு உள்ளாகியிருந்தது.

(ஓள) ஹோல்புரூக் கோவில் வீதியை அபிவிருத்தி செய்வதற்காக 2016 ஆம் ஆண்டின் போது கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 451,827 தொகை நுவரெலியா பிரதேச செயலகத்தால் செலவு செய்து வீதி அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. எனினும் 2016 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட பகுதியின் விரிவாக்கல் இணைப்புக்கு அருகாமையில் வீதியின் 07 இடங்களில் கணக்காய்வுத் திகதியான 2018 சனவரி 16 ஆந் திகதியளவில் வெடிப்புக்கள் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஃ) நாகசேன ட்ரில்குட்ரீ தோட்ட வீதியை நிர்மாணிப்பதற்காக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. நுவரெலியா பிரதேச செயலகத்தால் ரூபா 1.50 மில்லியன் உடன்படிக்கைப் பெறுமதிக்கு அந்த வீதி நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2018 சனவரி 19 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது நிர்மாணிக்கப்பட்ட வீதியின் 16 இடங்களில் நடுவில் வெடித்திருந்தது. வீதியின் மேற்பரப்பு முறையாகத் தயாரிக்கப்படாமையின் காரணமாக வீதியின் நடுப் பகுதியில் 6'' கன அளவு இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(க) புளுஎல கொலணிக்குச் செல்லும் வீதியின் வடிகால் முறைமை மற்றும் மதகுவை நிர்மாணிக்கும் வேலைக்காக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் நுவரெலியா பிரதேச செயலகத்தால் ரூபா 495,000 செலவு செய்து அந்த வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே நிர்மாண வேலைக்குரிய வடிகால் முறையின் அடிப்பாகத்திற்கு 5'' இற்கு மேற்பட்ட கொங்கிரீட் தளம் இடுவதற்கு ரூபா 62,748 மதிப்பீடு செய்யப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், 6'' கன அளவில் 1.2.4 கலவை வடிகாலின் அடிப்பாகத்திற்குப் போடப்பட்டிருந்தும் அதற்காக மேலும் 5'' இற்கு மேற்பட்ட கொங்கிரீட் தளம் போடுவதற்கான தேவைப்பாடு தொடர்பாக உறுதிப்படுத்தும் சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. நிர்மாண வேலை சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது 2'' அங்குலத்திலான சேற்று கொங்ரீட் தளம் போடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அதற்காக ரூபா 39,143 மிகைக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(கா) பீட்ரு தோட்ட வீதியை அபிவிருத்தி செய்வதற்காக மலை நாட்டு புதிய கிராமங்கள் அமைச்சினால் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மாவட்ட செயலகத்தால் ரூபா 490,167 செலவு செய்து வீதி அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது 1.2.4 கலவையில் வீதிக்கு கொங்ரீட் இடுவதற்காக கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தும் அதற்காக 19mm கற்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. அதற்கிணங்க ரூபா 80,665 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(கி) தரமபுரம் கொலணியில் நீர் செயற்திட்டத்தை நிர்மாணிப்பதற்காக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. நுவரெலியா பிரதேச செயலகத்தால் இச் செயற்திட்டத்திற்காக ரூபா 500,000 செலவு செய்யப்பட்டிருந்தது. குழாய்க் கிணறு நிர்மாணிக்கப்பட்டு நீரை பெற்றுக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டிலிருந்து குழாய்க் கிணறுக்காக நிலத்தை துளையிட்டு குழாய்கள் போடப்பட்டிருந்தன. மூன்று வழி மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் நீர் மோட்டரைப் பெற்றுக்கொள்வதற்கும் தேவையான நிதி ஏற்பாடு வழங்கப்படாததன் காரணமாக செயற்திட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுக் கொள்ள முடியாதிருந்தது.

(கீ) மந்திரிதென்ன உப வீதியின் மிகுதிப்பகுதியை அபிவிருத்தி செய்வதற்காக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் ரூபா 50,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. நுவரெலியா பிரதேச செயலகத்தால் அந்த வீதி அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. நிர்மாணிக்கப்பட்ட வீதியின் ஒரு பகுதியில் தேன் கூட்டு குறைபாடு (Hunny Comes) காணப்பட்டது. இப் பிரதேசம் மற்றும் வீதி மண்சரிவுக்கு உட்படும் நிலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டிருந்தனால் வீதியின் சரிவுப் பகுதியில் பிடிப்புச் சுவர் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(கீ) புனித ரெகியுலாகிலிருந்து கெலனிகல் பகுதிக்குச் செல்லும் வீதியை நிர்மாணிப்பதற்காக தேசிய கொள்கைகள் மற்றும பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. நுவரெலியா பிரதேச செயலகத்தால் ரூபா 500,000 செலவு செய்து நிர்மாண வேலை 2017 யூலை 17 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. 2018 சனவரி 19 ஆந் திகதியளவில் அந்த வீதியின் பல இடங்கள் பழுதடைந்து காணப்பட்டன.

(கு) அகில இலங்கை மாணவர்களின் திறன்களை மதிப்பீடு செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றுபவர்களின் தங்குமிடத்திற்கு வெந்நீரில் குளிக்கும் நிலயத்தை நிர்மாணிக்கும் வேலைக்காக ரூபா 2.11 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவ் வேலைக்காக 65 வெந்நீர் சவர்களைப் பொருத்துவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் ரூபா 1.29 மில்லியன் செலவு செய்து 55 சவர்கள் மாத்திரம் பொருத்தப்பட்டிருந்தது. நிர்மாண வேலைக்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 61 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(கூ) சீதா எலிய கிராமத்திற்கு ஊடாக திவென கால்வாயை விரிவுபடுத்தி அனர்த்தங்களைக் குறைக்கும் செயற்திட்டத்திற்காக இடர் முகாமைத்துவ அமைச்சினால் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. உடனடி நீர்பெருக்கு வான் கதவுகள் உடைதல், வெள்ளம் போன்ற அனர்த்த நிலைமைகளைக் குறைத்தல் இச் செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக இருந்தன. கால்வாயின் 77 மீற்றர் அளவான பகுதியில் மதிப்பீட்டின் பிரகாரம் நிர்மான வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்தும் கால்வாயின் இன்னும் 30 மீற்றர் அளவான பகுதி பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக செயற்திட்டத்தினால் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஞ) ரோச உயன உள்ளக வீதியில் அனர்த்தத்தைக் குறைக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 2.66 மில்லியன் நுவரெலியா பிரதேச செயலகத்தால் செலவு செய்யப்பட்டிருந்தது. செயற்திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் வீதியினூடாக நீரும் சேரும் வெளிச் செல்வதன் காரணமாக வீடுகள் நீரில் மூழ்குவதைக் கட்டுப்படுத்துவதும் வீதிகள் மற்றும் வடிகால் முறைமையைத் திருத்தம் செய்வதும் குறிக்கோள்களாக இருந்தது. அதற்கிணங்க நுவரெலியா பிரதேச செயலகத்தால் வீதிக்கு கொங்ரீட் இடுவதற்கும் வடிகால் முறைமையைத் தயார்படுத்துவதற்கும் ரூபா 1.89 மில்லியன் தொகையான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த மதிப்பீட்டை மீறி ரூபா 2.66 மில்லியன் செலவு செய்து வடிகால் முறைமையைத் தயார்படுத்தாது வீதிக்கு காபட் இடுதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் காரணமாக செயற்திட்டத்தினால் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.12 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்

மாவட்ட செயலகத்திற்குரிய 26001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 32.00 | 31.99 | 22.00 | 24.53 | 94.00 | 82.12 |

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) நிலுவையாக இருந்த கடன் மீதிகளை அறவீடு செய்யாமை**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் மொத்த தொகையானது இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளைத் தவிர்த்து ரூபா 683,082 ஆக இருந்தது. அந்த நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதி 01 இலிருந்து 05 ஆண்டுகள் வரையான காலப்பகுதியாக காணப்பட்டிருந்தும் அந்நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டது.

**(ஆ) தனித்தனி கடன் மீதிகள் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.**

இணக்கக் கூற்றில் தனித்தனி மீதிகளின் வகைப்படுத்தலின் கீழ் குறிப்பிடப்பட்ட வலப்பனை பிரதேச செயலகத்திலுள்ள மூன்று உத்தியோகத்தர்களின் ரூபா 433,271 மொத்த தொகையான கடன் மீதிகளின் தவணைக் கட்டண அறவீடுகளின் விபரமும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் மீதியும் கடன் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அம்பகமுவ பிரதேச செயலகத்திலுள்ள விழா முற்பணப் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்காததுடன் ரூபா 52,500 கடன் தவனைப் பண அறவீடு இணக்கக்கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை.

**2.13 கட்டுநிதிக் கணக்கு**

மாவட்ட செயலகத்திற்குரிய 7002/0000/00/0307/0017000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 907,178 ஆகும். இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 நவம்பர் 02 ஆந் திகதிய 04/2017 ஆம் இலக்க திறைசேரி செயற்பாடுகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மாவட்ட செயலகத்தால் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசுப் புத்தகத்தை சமப்படுத்தி அதன் மீதி தொடர்பான குறிப்பு 2018 சனவரி 02 ஆந் திகதிக்கு முன்னர் வங்கிக்கு ஒப்படைத்து வங்கியின் மூலம் வரவுக்குறிப்பு ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டு அதனை திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது. எனினும், வரவுக் குறிப்பு 2018 சனவரி 22 ஆந் திகதி வரை திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(5) இன் பிரகாரம் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் பெற்றுக்கொள்ளப்பட்ட குறித்த செயற்பாட்டிற்கான உப கட்டு நிதி தீர்த்துவைக்கப்படுதல் வேண்டும். கொத்மலை, அம்பகமுவ, வலப்பனை, ஹங்குரன்கெத, நுவரெலியா, ஆகிய பிரதேச செயலகங்களால் 54 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட குறித்த செயலுக்கான உப கட்டுநிதி 23 நாட்களிலிருந்து 300 நாட்கள் வரையான காலப்பகுதி தாமதித்து தீர்த்து வைக்கப்பட்டிருந்தது.

(இ) நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் குறித்த செயலுக்கான உப கட்டுநிதியைப் பெற்றுக்கொள்வதற்காக செலவு மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அம்பகமுவ பிரதேச செயலகத்தால் அவ்வாறு செலவு மதிப்பீடு சமர்ப்பிக்காத உத்தியோகத்தர்களுக்கு 02 சந்தர்ப்பங்களின் போது ரூபா 50,000 ஆக குறித்த செலவுக்கான உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

## 2.14 பொது வைப்புக் கணக்குகள்

மாவட்ட செயலகத்தின் கீழுள்ள 05 பொது வைப்புக் கணக்குகளின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டு மொத்தம் ரூபா 330 மில்லியனாகும். அது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 17.28 மில்லியன் தொகையான 271 வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 215 (3) இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது ஹங்குரன்கெத பிரதேச செயலகத்தால் செலவு செய்யப்படாத ரூபா 31.83 மில்லியன் தொகை செலவாகக் கணக்கீடு செய்யப்பட்டு அப்பணம் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) ஏனைய அமைச்சுக்கள்/திணைக்களங்களால் பல்வேறு செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 753,582 தொகை 11 சந்தர்ப்பங்களின் போது உரிய செயற்பாடுகளை நிறைவேற்றாது அம்பகமுவ, கொத்மலை, நுவரெலியா, ஆகிய பிரதேச செயலகங்களின் பொது வைப்புக் கணக்குகளில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2012 மே 24 ஆந் திகதிய 4/3/1/2001/48 ஆம் இலக்க காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகள் 72 வார காலத்திற்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டி இருந்தது. எனினும், பல்வேறு செயற்திட்டங்களின் கீழ் காணிகளை சுவீகரிப்பதற்காக 2006 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான காலத்தில் 54 சந்தர்ப்பங்களின் போது நுவரெலியா பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 35.44 மில்லியன் தொகை வைப்புக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(உ) அம்பகமுவ பிரதேச செயலகத்தை நிர்மாணிக்கும் 96 வேலைகளுக்காக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 5.69 மில்லியன் பிடிகாசை விடுவிப்பதற்கு அல்லது அரசாங்கத்தின் வருமானத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.15 பதிவேடுகள் மற்றும் ஏடுகளைப் பேணாமை

மாவட்ட செயலகத்தால் கீழே காட்டப்பட்டுள்ள சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறைப்படியாகவும் நாளது வரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (i) | ஆளணி வேதனப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 453 | வலப்பனை பிரதேச செயலகத்தால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | பெற்றுக்கொள்ளப்படுகின்ற காசோலைகள், காசுக் கட்டளைகள் முதலியவற்றுக்கான பதிவேடு | நிதிப்பிரமாணம் 451 | ஹங்குரன்கெத்த பிரதேச செயலகத்தால் நாளது வரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | கொத்மலை மற்றும் நுவரெலியா பிரதேச செயலகங்களால் பிணைப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | நுவரெலியா மாவட்ட செயலகம், வலப்பனை மற்றும் ஹங்குரன்கெத்த பிரதேச செயலகம் என்பவற்றால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (v) | வாகனங்கள் பட்டியல்படுத்தப்பட்ட பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) | வலப்பனை பிரதேச செயலகத்தால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | பெறுகைக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவினதும் வருகைப் பதிவேடு | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டிகள் | ஹங்குரன்கெத்த மற்றும் வலப்பனை பிரதேச செயலகங்களால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (vii) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச்சுற்றறிக்கை | ஹங்குரன்கெத்த, அம்பகமுவ, கொத்மலை, வலப்பனை, நுவரெலியா ஆகிய பிரதேச செயலகங்களால் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (viii) | கணணி, துணைக்கருவிகள், மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கொத்மலை பிரதேச செயலகத்தால் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. |

**2.16 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | - | |
| (i) XIX ஆம் அத்தியாயத்தின் 4.3 ஆம் பிரிவு | - | கொத்மலை பிரதேச செயலகத்தால் பொதுச் சேவை மற்றும் பட்டோலைப்படுத்தப்பட்ட வீடுகளை ஒதுக்கீடு செய்து கொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களின் மாதிரியைப் பயன்படுத்தி நிறுவனத் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அந்த முறைமை அலுவலகத்தில் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | XIX ஆவது அத்தியாயத்தின் 4.3.4 ஆம் பிரிவு | - | கொத்மலை பிரதேச செயலகத்தால் அரசாங்க வதிவிடங்களைக் கோரி சமர்ப்பிக்கின்ற விண்ணப்பங்களை பதிவு செய்வதற்காக ஒவ்வொரு வதிவிடத்தின் தரத்தின் பிரகாரம் தனித்தனியாக வாக்குறுதிப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | தாபனவிதிக் கோவையின் ஓஐஓ ஆம் அத்தியாயத்தின் 5.8 ஆம் பிரிவு | - | ஹங்குரன்கெத்த பிரதேச செயலகத்தில் அரசாங்க வதிவிடங்களில் குடியிருக்கம் உத்தியோகத்தர்களிடமிருந்து அவர்களால் பயன்படுத்திய மின்சாரம் மற்றும் நீருக்கான கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | XIX ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவு | - | கொத்மலை பிரதேச செயலகம் பொது மற்றும் பட்டியல்படுத்தப்பட்ட வதிவிடங்களுக்காக பொருள் இருப்பு பதிவேட்டை பேணியிருக்கவில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்

----------------------------------------------------------------------

| | | |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 316 | - | மாவட்ட செயலகத்தின் அடியிதழ் ஏடு களஞ்சியத்தில் பாதுகாப்பின்றி வைக்கப்பட்டிருந்தது. |

(இ) அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை

---------------------------------------------------------

| | | |
|---|---|---|
| 2001 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய 18/2001 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | வலப்பனை பிரதேச செயலகத்தில் ஒரு பிரிவில் 10 ஆண்டுகளிலிருந்து 15 ஆண்டுகள் வரையான நீண்டகாலமாக உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். |

(ஈ) 2016 சனவரி 12 ஆந் திகதிய 2016/1 ஆம் இலக்க சமூகத்தை வலுப்படுத்தல் மற்றும் நலன்புரி அமைச்சின் சுற்றறிக்கை

| | | | |
|---|---|---|---|
| (i) | 2.7 ஆம் பந்தி | - | ஹங்குரன்கெத்த பிரதேச செயலகத்தால் முதியோர் படிகளைப் பெற்றுக்கொள்ளாத நலன்பெறுனர்களின் பெயர்கள் சிகப்பு பேனையால் வெட்டப்பட்டிருந்தும் அதற்காக எதுவித காரணமும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2.14 ஆம் பந்தி | - | ஹங்குரன்கெத்த பிரதேச செயலகத்தில் 03 மாதங்களிலிருந்து ஒரு ஆண்டு வரை படிகளைப் பெற்றுக்கொள்ளாத 80 நலன்பெறுநர்களுக்கு அதிகமானோர்களின் பெயர்கள் கொடுப்பனவு பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | (iii) 5.5 ஆம் பந்தி | - | முதியோர் படிகள் ஒவ்வொரு மாதமும் 15 ஆந் திகதியிலிருந்து ஆரம்பித்து 07 வேலை நாட்களுக்குள் அனைத்து தபால் உப தபால் அலுவலகங்கள் மற்றும் திவிநெகும வங்கியின் மூலம் செலுத்தப்பட வேண்டிய போதிலும் மாதாந்தம் ரூபா 10 மில்லியனுக்கு மேற்பட்ட படிகள் செலுத்துகின்ற அம்பகமுவ பிரதேச செயலகத்திற்கு மாவட்ட செயலகத்திடமிருந்து 15 நாட்களிலிருந்து 06 மாதங்கள் வரை தாமதித்து நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. |
| | (iv) 7.3 ஆம் பந்தி | - | அம்பகமுவ மற்றும் ஹங்குரன்கெத்த பிரதேச செயலகங்களால் ஒவ்வொரு ஆண்டும் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் நலன்பெறுனர்கள் தொடர்பாக மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2016 ஏப்ரல் 11 ஆந் திகதிய மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு செயலாளரின் 2016/06 ஆம் இலக்க சுற்றறிக்கை | | |
| | (i) 11.5 ஆம் பந்தி | 4,578,000 | 06 சந்தர்ப்பங்களின் போது நுவரெலியா பிரதேச செயலகத்தில் ஊட்டச்சத்துப் பொதி நிகழ்ச்சித்திட்டத்தின் விலைப்பட்டியல்கள் 01 மாதத்திலிருந்து 05 மாதங்கள் வரையான காலதாமதத்தில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. |
| | (ii) 14.4 ஆம் பந்தி | - | நுவரெலியா பிரதேச செயலகத்தில் 2017 சனவரி மாதத்திலிருந்து திசெம்பர் மாதம் வரை ஊட்டச்சத்து பொறி நிகழ்ச்சித்திட்டத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்தலானது 03 நாட்களிலிருந்து 79 நாட்கள் வரையான கால தாமதத்தின் பின்னர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2016 திசெம்பர் 23 ஆந் திகதிய சங்/சங்/2-11/15/60 ஆம் இலக்க தேசிய இளைஞர் சேவைகள் சபை பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 2.9 ஆம் பந்தி | - | 2017 மார்ச் 10 ஆந் திகதி வரை நுவரெலியா பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான 08 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இளைஞர் சங்கங்களைத் தோற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | 2017 சனவரி 12 ஆந் திகதிய MWCA/WB/கிரா.கா.செ/2017 ஆம் இலக்க இலங்கை மகளிர் பணியக பணிப்பாளரின் கடிதம் | - | நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவில் காணப்பட்ட 72 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 56 பிரிவுகளில் மாத்திரம் மகளிர் செயற்பாட்டுச் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டிருந்தன. |

**2.17 உள்ளகக் கணக்காய்வு**

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 134(2) இன் பிரகாரம் நிதி நடவடிக்கைகளுக்குரிய உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தும் அதன் மூலம் அலுவலகத்தின் அனைத்து நடவடிக்கைளும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 134(3) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.18 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவு**

மேலே 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட உள்ளபடியான வெற்றிடமான மற்றும் மிகையான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுகின்றன. மீளாய்வாண்டிற்காக மாவட்ட செயலகத்தால் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 379.3 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு நபருக்கான செலவு ரூபா 327,837 ஆக இருந்தது.

| | ஆளணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளில் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 35 | 25 | 10 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 20 | 09 | 11 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 1305 | 1050 | 255 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 90 | 71 | 19 | - |
| (v) | அமையம்/ஒப்பந்தம் | - | 2 | - | 2 |
| | மொத்தம் | 1450 | 1157 | 295 | 2 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) முறையற்ற வகையில் ஏனைய தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

2014 நவம்பர் 10 ஆந் திகதியிலிருந்து அமுலாகும் வகையில் அலுவலக ஊழியர் சேவையின் ஒரு உத்தியோகத்தராக நியமனத்தைப் பெற்று மாவட்ட செயலகத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட ஒரு உத்தியோகத்தர் 2015 ஏப்ரல் 08 ஆந் திகதியிலிருந்து ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் மேல் அங்கீகாரத்திற்கு உட்பட்டு கல்வி அமைச்சிற்கு இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார். 2018 ஏப்ரல் 04 ஆந் திகதி வரை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பதவியணியினரைப் பயிற்றுவித்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாவட்ட செயலகம் மற்றும் 05 பிரதேச செயலகங்களில் 1157 பதவியணியினர் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தும் 2017 ஆம் ஆண்டின் போது 239 உத்தியோகத்தர்களுக்காக மாத்திரம் பயிற்சி வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 918 உத்தியோகத்தகர்களுக்கு எதுவித பயிற்சியும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கடந்த 05 ஆண்டுகளின் போது பயிற்றுவித்தல் நடவடிக்கைக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 6.45 மில்லியன் நிதி ஏற்பாட்டில் ரூபா 5.82 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது அதற்கிணங்க கடந்த 05 ஆண்டு காலத்தின் போது உத்தியோகத்தர்களின் பயிற்சி நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு மாவட்ட செயலகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 1 சதவீதத்திலிருந்து 27 சதவீதம் வரையான வீச்சுடைய அளவான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.